# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

**30.11.2018–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

---

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**

**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.**

**பொருட்கள்**

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

**137.** வந்தவாசி நகராட்சியின் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடத்தின் குத்தகை உரிமம் ஒப்படைக்கும் நாள்முதல் மற்றும் (31.03.2021 முடியும்) 2020–2021ம் ஆண்டு ஆகிய மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை தமிழ் தினசரி நாளிதழ் ஒன்றின் மூலம் விளம்பரம் செய்யவும், அதற்காகும் செலவினத்திற்கும் மற்றும் இதர செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1989/2018/அ1, )

**138.**வந்தவாசி நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தி வரும் ஈப்பு வாகனம் TN25 AT 4738 பழுது ஏற்பட்டுள்ளதை சீர் செய்து கொள்ளவும், அதற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

1.மன்றம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

2.அவசரம் அவசியம் கருதி ஈப்பு வாகனம் TN25 AT 4738–ன் பழுது பார்த்தமைக்கு தொகை ரூ.49,100/–மேற்கொண்டது மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

(ந.க.எண்.1945/2018/எச்1, )

**139.** வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் பொதுசுகாதாரப் பணிக்கு பயன்படுத்திவரும் குப்பை வண்டிகள் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஜீப் ஆகியவைகளின் காப்பீடு காலம் 07.06.2018 உடன் முடிவடைவதால் அவசரம் அவசியம் கருதி உடன் கீழ்குறிப்பிட்ட விவரம்படி காப்பீடு தொகை செலுத்திடவும், காப்பீடு காலம் புதுப்பித்துக்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**விவரம்**

| | | |
|---|---|---|
| 1.TN25/AW/3066 | குப்பை வண்டி | –37109/– |
| 2.TN25/AW/3043 | குப்பை வண்டி | –37109/– |
| 3.TN25 AT/4738 | ஜீப் | –21441/– |
| | மொத்தம் | –95,659/– |

---------

<u>அலுவலககுறிப்பு–</u>

1.மன்றம் ஒப்புதல் வழங்குதல்.
2.அவசரம் அவசியம் கருதி காப்பீடு தொகை ரூ.95,659/– செலுத்திடவும் மன்றம் அனுமதி வழங்குதல்.

(ந.க.எண்.0815/2018/இ1, )

140. வந்தவாசி நகராட்சி தூய்மை பாரத திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–2017ல் ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 இடங்களில் நுண்ணிய உரம் ஆலை (Decentralized Micro Compost Centre) அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் செயல்முறை ந.க.எண்.29014/2016/பி3, நாள்.11.12.2017ல் திருத்திய நிர்வாக அங்கீகாரம் பெறப்பட்டது.

| விவரம் | மதிப்பீடு |
|---|---|
| 1. பேருந்து நிலையம் அருகில் கிழக்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | ரூ.50.00 இலட்சம் |
| 2.பேருந்து நிலையம் அருகில் மேற்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | ரூ.45.00 இலட்சம் |
| மொத்தம் | ரூ.95.00 இலட்சம் |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 18.01.2018ல் பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகள் விவரம்

பணியின் விவரம் – ஒப்பந்ததாரர்கள் விவரம்

| வ.எண். | பணியின் விவரம் | திரு.S.தர்மதுரை | திரு.P.இளங்கோவன் |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் அருகில் கிழக்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | 4–88% மதிப்பீட்டை விட அதிகம் | 5–05% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | பேருந்து நிலையம் அருகில் மேற்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | 4–87% மதிப்பீட்டை விட அதிகம் | 7–61% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.P.இளங்கோவன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை விட குறைவாகவும், மதிப்பீட்டைவிட 1.4.88% , 2.4.87%, கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.S.தர்மதுரை, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் அந்தந்த பகுதிமக்கள் நுண்ணிய உரம் ஆணை அமைக்க எதிர்ப்பு தெரிவித்ததன்பேரில் மாவட்ட ஆட்சியர் அவர்கள், மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் வேலூர், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆய்வு மற்றும் அறிவுரையின் பேரில் மேற்கண்ட பணிகள் செய்ய தேர்வு செய்த இடங்களுக்குப் பதிலாக கீழ்வரும் இடங்களில் பணிசெய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1 | 19வது வார்டு சுடுகாடு பகுதியின் தெற்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | ரூ.50.00 இலட்சம் |
| 2 | 19வது வார்டு சுடுகாடு பகுதியின் வடக்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | ரூ.45.00 இலட்சம் |

மேற்கண்ட இடங்களில் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி மாறுதல் இன்றி ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட விலைவிகிதம் மாறுதல் இன்றியும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.S.தர்மதுரை அவர்கள் மூலம் பணி செய்து முடிக்கவும், மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.பொது சுகாதாரம் கருதியும், அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று தூய்மை பாரதம் பணி அவசியம் கருதி திரு.S.தர்மதுரை ஒப்பந்ததாரருக்கு

பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.194/2016/எச்1)

141.மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் அவர்களின் ந.களண்.7301/2012/சி1, நாள்.11.05.2018ந் தேதிய கடிதத்தில் தெரிவித்தவாறு கீழ்வரும் விபரத்தில் காணும் கணினி உபயோகப்பொருட்கள் GETS COMPUTER வேலூர் நிறுவனத்திடமிருந்து சப்ளை பெறவும், அதற்கான தொகை ரூ.7000/– வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

விபரம்

1.HPK 1500 MODEL KEY BOARD VSB =7 Nos x650=RS.4550/–
2.HP OPTICAL MOUSE USB =7 Nos x350=RS.**2450/-**

**TOTAL** =RS 7000/–

அலுவலக குறிப்பு–

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.கணினி உபயோகம் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று கணினி உபயோகப்பொருட்கள் சப்ளை பெறவும், தொகை வழங்கவும், நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். /2018/சி1)

142.வந்தவாசி நகராட்சியில் தற்போது நடைபெற்ற 2017–2018ம் ஆண்டு தணிக்கைக்கு தேவையான கோப்புகள் ஜெராக்ஸ் எடுத்ததற்கும், பதிவேடுகள் பைண்டிங் செய்ததற்கும், ஆண்டு கணக்கு DTP செய்து பைண்டிங் செய்த வகையில் செலவினம் மேற்கொண்ட வகையில் தொகை ரூ.15,450/– வழங்கிட மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1.மன்றம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.
2.அவசரம் அவசியம் கருதி நிர்வாக நலன் கருதி செய்தமைக்கு தொகை ரூ.15,450/–ஐ திரு.சிவகுமார், இளநிலை உதவியாளர் என்பவருக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

(ந.க.எண். /2018/சி1)

143.வந்தவாசி நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு மின்கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மீட்டர் பாக்ஸ்களில் பழுதடைந்துள்ள 10 எண்ணிக்கை GI மீட்டர்பாக்ஸ்களை அகற்றி புதிய மீட்டர் பாக்ஸ்கள் பொருத்தவும், 10 எண்ணிக்கை GI மீட்டர் பாக்ஸ்கள் மற்றும் அதற்கு தேவையான உதிரி பாகங்கள் சப்ளைக்கான விலைப்புள்ளிகள் 12.11.2018ல் விலைப்புள்ளிகள் கோரியதில் 17.11.2018ல் வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

விவரம்

| வ.எண். | விலைப்புள்ளி நிறுவனம் விபரம் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நவீன் எலக்ட்ரிக்கல்ஸ் நெ.78, பஜார்வீதி வந்தவாசி. | ரூ.10,095/– |
| 2 | தமிழ்நாடு எலக்ட்ரிக்கல்ஸ், நெ.21, காஞ்சிபுரம் ரோடு, வந்தவாசி | ரூ.9,635/– |
| 3 | ராசி எலக்ட்ரிக்கல்ஸ், நெ.22, ஆரணி ரோடு வந்தவாசி. | ரூ.9,364/– |

அலுவலக குறிப்பு–

1.மன்றம் முடிவு செய்யலாம்.

2.வரப்பெற்றுள்ள 3 விலைப்புள்ளிகளில் ரூ.9364/– என குறைவான தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள ராசி எலக்ட்ரிக்கல்ஸ், வந்தவாசி நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

3.தெருவிளக்கு பராமரிப்பு பணி அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று ராசி எலக்ட்ரிக்கல்ஸ் வந்தவாசி நிறுவனத்துக்கு மின்சார பொருட்கள் வழங்கல் உத்திரவு வழங்கவும், தொகை வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2026/2018/இ1)

144.வந்தவாசி நகராட்சியின் ஆணையாளர் குடியிருப்பில் பழுதடைந்துள்ள (Water Heacer) தற்போது பயனின்றி உள்ளதால் அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி உடன் வாங்கி கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசரம் அவசியம் கருதி உடன் வாங்கியவகையில் அதற்கான செலவினத்தொகை ரூ.6000/– செலவினம் மேற்கொண்டதற்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண். /2018/இ1)

145.வந்தவாசி நகராட்சி பகுதியில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணியில் தெருவிளக்கு எரிவதை நேரில் ஆய்வு மேற்கொண்டதில் காந்தி சாலையில் இரண்டு சோடியம் விளக்கு பழுதடைந்துள்ளதை அவசரம் அவசியம் கருதி உடன் சீர் செய்து கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1.மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

2.அவசரம் அவசியம் கருதி உடன் தெருவிளக்கு சீர் செய்தமைக்கு தொகை ரூ.2400/– வழங்கிட மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். /2018/இ1)

145.A வந்தவாசி நகராட்சியில் குடிநீர்நிதி மற்றும் பொதுநிதி 2018–2019 –ன் கீழ் கீழ்கண்ட விபரத்தில் காணும் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>விபரம்</u>

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | **குடிநீர் நிதி – 2018 –2019**<br>வந்தவாசி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் உள்ள மினிபவர் பம்புகள் மற்றும் கைபம்புகள் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு செய்தல். | ரூ. 5.00 இலட்சம் |
| 2. | வந்தவாசி நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளின் குடிநீர் மெயின் பைப் லைன் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணி செய்தல் | ரூ. 5.00 இலட்சம் |
| 3. | வந்தவாசி நகராட்சி 23வது வார்டில் உள்ள சுகநதி கரையில் உள்ள குடிநீர் கிணறுகளை 2 எண்ணிக்கைக்கு குடிநீர் விநியோகம் சரியான முறையில் செய்ய குடிநீர் கிணற்றின் மேல் பகுதி திறந்த வெளியாக உள்ளதற்கு குடிநீரை பாதுகாக்க கிணற்றின் மீது இரும்பு மூடிகள் அமைத்தல், மின்மோட்டார் புதியதாக பொருத்துதல், மின்சாரசர்வீஸ் மற்றும் ஒயரிங் வேலைகள் செய்து இயக்கித்தருதல் பணி. | ரூ. 3.00 இலட்சம் |
| 4. | வந்தவாசி நகராட்சி வார்டு–19ல் இலட்சுமி நகரில் குடிநீர் மேநீர் தேக்க தொட்டி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல் பணி. | ரூ. 5.00 இலட்சம் |
| 5. | அனக்காவூர் குடிநீர் தலைப்பிடத்தில் உள்ள 3 எண்ணிக்கை கிணறுகளின் மேல்தட்டு RCC சிலாப்புகள் பழுதடைந்து உள்ளதை அகற்றி புதிய சிலாப்புகள் அமைத்தல் மற்றும் பழுதடைந்த பைப்புகள் மற்றும் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்து இயக்கித்தருதல். | ரூ.4.00 இலட்சம் |
| | **பொதுநிதி –2018 –2019** | |
| 1 | வந்தவாசி நகராட்சி வார்டு –14, சன்னதி தெரு, பிள்ளையார் கோவில் இருந்து புதிய பஸ்நிலையம் செல்லும் சாலை வரை வடக்கு பக்கம் வடிகால்வாய் அமைத்தல் பணி | ரூ.1.50 இலட்சம் |
| 2 | தாலுக்கா ஆபீஸ் சாலை –வார்டு எண்.4ல் உள்ள அம்மா உணவகம் பராமரிப்பு பணி | ரூ.1.50 இலட்சம் |
| 3. | வார்டு எண்.19–ல் சுடுகாடு செல்லும் சாலையில் புதியதாக சுடுகாட்டு மேடை அமைத்தல் பணி. | ரூ.2.50 இலட்சம் |
| 4. | வந்தவாசி நகராட்சி பகுதியில் குப்பை உருவாகும் இடத்தில் உரம்மாக்குதல் (On site Composting ) 4 ( நான்கு இடங்கள்) | ரூ.3.00 இலட்சம் |
| 5. | வந்தவாசி நகராட்சி வார்டு–17ல் சன்னதி புதுதெருவில் குடிநீர் பதிக்க வெட்டப்பட்ட சிமெண்ட் சாலையை புதுப்பித்து அமைத்தல் பணி. | ரூ.9.50 இலட்சம் |
| 6. | வந்தவாசி நகராட்சி வார்டு எண்.4ல் பழைய பேருந்து நிலையத்தில் பழுதடைந்துள்ள இலவச சுகாதார வளாகம் மராமத்து பணி செய்தல். | ரூ.2.00 இலட்சம் |
| 7. | வந்தவாசி நகராட்சி வார்டு எண்.9ல் காதர் மீரா தெருவில் பழுதடைந்த சிமெண்ட் சாலையை புதுப்பித்து அமைத்தல் பணி | ரூ.3.20 இலட்சம் |

| | | |
|---|---|---|
| 8. | வந்தவாசி நகராட்சி கிழக்கு பகுதி சுற்றுச்சுவர் அருகில் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி. | ரூ.3.25 இலட்சம் |

அலுவலக குறிப்பு –

மன்றம் வழங்கலாம்.

(ந.க.எண்.1645/2018/இ1)

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி